**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 114** **நாள்:15.08.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்திய சுதந்திர தினவிழாவில் மூவர்ண தேசியக் கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செய்து, சிறப்பாக பணியாற்றிய மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை சிறப்பு அதிகாரி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்திய சுதந்திர தினவிழா இன்று (15.08.2019) சிறப்பாக நடைபெற்றது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர், தேசிய மாணவர் படை, கலர் பார்ட்டி, சாரண, சாரணியர் மற்றும் வாத்தியக்குழுக்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, 4 பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவியர்களின் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் சிறப்பாக சேவையாற்றிய சமுதாய அமைப்பாளர்கள் மற்றும் சமுதாய வள பயிற்றுநர்களை பாராட்டி கேடயங்களையும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த 3 பணியாளர்களுக்கு காசோலை மற்றும் சான்றிதழ்களையும், பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் 64 நபர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களையும் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, கடந்த 5 ஆண்டுகளில் அதிகபட்ச மாணவர் சேர்க்கையை விட இந்த ஆண்டு மாணவர் சேர்க்கையை அதிகரித்த 71 சென்னைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் கடந்த ஆண்டைவிட நடப்பு கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையை அதிகரித்த 87 சென்னைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களையும் பாராட்டி சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

மேலும், 2018–19ம் கல்வியாண்டில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற 25 சென்னைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், 100 சதவீதம் மதிப்பெண் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த 5 ஆசிரியர்கள் மற்றும் 100 சதவீதம் மதிப்பெண் பெற்ற 5 மாணவ, மாணவியர்களை பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, அணிவகுப்பில் கலந்து கொண்ட தேசிய மாணவர் படை, சாரண, சாரணியர், கலர் பார்ட்டி மற்றும் வாத்தியக்குழுக்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கும்,

கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற மாணவ/மணவியர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**